**குழித்துறை நகராட்சி**
**குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 07-04-2025 திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சியினை அரசு விழாவாக நிரந்தரமாக நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2025-ம் வருடம் நடைபெறவுள்ள 100-வது வாவுபலி பொருட்காட்சியினை நகர்மன்ற தீர்மான எண்.1177, நாள் 27-02-2025-ன்படி 30 நாட்கள் நடத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே 02-07-2025 முதல் 31-07-2025-ம் தேதி வரை நடத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத்தீர்மான எண்.1241 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சியினை அரசு விழாவாக நிரந்தரமாக நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் 2025-ம் வருடம் நடைபெறவுள்ள 100-வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவு கட்டணம் தவிர்த்து கீழ்கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 11 வரையுள்ள இனங்களையும் ஒரே இனமாக சேர்த்து பொது ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமை (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒளி திரை மூலம் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 3 | நகராட்சி குறிப்பிட்ட இடத்தில் ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் உணவு விடுதி நடத்தும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |

| | |
|---|---|
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பானி பூரி அமைத்து விற்பனை செய்யும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 8 | தபால் நிலையம் முன்புள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைத்து நடத்தும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 9 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் கடைகள் அமைத்து நடத்தும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 10 | **100–வது வாவுபலிபொருட்காட்சியில் அமைக்கப்படும் ஸ்டால்களில் பொருட்களை விற்பனை செய்யும் உரிமம்**<br>**(நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி)** |
| 10 (அ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன் பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை (கடை 1–ன் அளவு 7x5அடி) |
| 10 (ஆ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 9 வரை (கடை 1–ன் அளவு 7x6 அடி ) |
| 10 (இ) | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால் 1 முதல் 20 வரை (கடை 1–ன் அளவு 8x6 அடி) |
| 10 (ஈ) | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கடைகள் 1 முதல் 30 வரை (கடை 1–ன் அளவு 10x9 அடி) |
| 10 (உ) | விளம்பர ஸ்டால் 1 அளவு 9x8 அடி (நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளின்படி) |
| 11 | ஆக்கிரமிப்புக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் மட்டும்) |

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**650/2025/**அ**2

மன்றத்தீர்மான எண்.1242 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

100-வது வாவுபலி பொருட்காட்சியின் குத்தகை உரிமங்களுக்கான பொது ஏல நிபந்தனைகள் கீழ்கண்டவாறு.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.5000/- செலுத்தி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
2) குத்தகை உரிமங்களுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.70.00 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5.00 இலட்சம் செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும். மேற்கண்ட தொகையினை தனித்தனியாக வங்கி வரைவோலையாக நகராட்சியில் சமர்ப்பிக்க வேண்டும்.
3) கூடுதல் வைப்புத்தொகை ரூ.5.00 இலட்சம் வாவுபலி பொருட்காட்சி முடிவுற்ற பின்னர் குத்தகைதாரருக்கு திருப்பி வழங்கப்படும். மேற்கண்ட தொகையினை குத்தகை கணக்கில் ஈடு செய்து வழங்கப்படமாட்டாது

4) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் கடவு சீட்டு அளவிலான புகைப்படம் மற்றும் ஆதார் அடையாள அட்டை பான்கார்டு, தொலைபேசி எண் மற்றும் GST எண் இணைத்திட வேண்டும்.
5) விண்ணப்பத்தில் விண்ணப்பம் பெற்ற நபரின் புகைப்படம் மட்டும் இணைத்து ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரில் நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையிருப்பின் வரியினை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். வரி நிலுவை இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. வரி மற்றும் வரியில்லா இனங்கள் மீது நிலுவை இல்லை என தடையில்லா சான்று இணைக்க வேண்டும்.
6) ஏலத்தை முடிவு செய்து மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழங்கப்படும். குத்தகை தொகை செலுத்த அறிவிப்பு பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் வைப்புத்தொகையினை தவிர்த்து குத்தகை தொகை வரிகள் உட்பட முழுவதும் நகராட்சி கருவூலகத்தில் காசாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ (Demand Draft) ஒரே தவணையில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகை பறிமுதல் செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும்.
7) ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணத்தால் ஒத்திவைக்கவோ அல்லது மாற்று தேதிக்கு மாற்றி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது.
8) ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உரிமம் பெற்றவர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் ஆணையாளர், குழித்துறை நகராட்சி பெயரில் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.
9) நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமம் பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
10) இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளப்பெருக்கம்/ தீயினால் ஏற்படும் இழப்பு, அரசால் பிறப்பிக்கப்படும் அவசர கால கட்டுபாடுகளுக்கும், ஏற்படும் இழப்புகளுக்கு உரிமம் பெற்றவரே முழு பொறுப்பாவர், இதில் நகராட்சியால் எந்தவித இழப்பிற்கு பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது.
11) நகராட்சி அனுமதியுடன் பொருட்காட்சி நடத்த அனுமதி பெற்றவர் தங்கள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தை மின்சார வாரியத்திற்கும் தாங்களே செலுத்த வேண்டும்.

12) தீ தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தை தீயணைப்பு துறைக்கும் செலுத்தி உரிய ரசீது பெற்று அதன் விவரம் நகராட்சியில் தெரிவிக்கப்பட வேண்டும்.
13) ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீங்குவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனங்களையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட கூடாது.
14) நகராட்சியால் வழங்கப்படும் வரைபடத்தின் அடிப்படையில் பக்கக்காட்சி மற்றும் கடைகள் அமைக்கப்பட வேண்டும்.
15) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.
16) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருட்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழங்க வேண்டும்.
17) பக்கக்காட்சி நடத்தும் மைதானத்தில் கபடி போட்டி தினசரி நடைபெற்று வரும் இடத்தில் 50’x50’ இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பக்கக்காட்சி இனங்களும் அமைக்கப்பட கூடாது.
18) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக்கூடாது.
19) குத்தகை இனங்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் செலுத்திட நேரும் பட்சத்தில் உரிமதாரர் முழு பொறுப்பு ஏற்று உரிய தொகையினை செலுத்த வேண்டும்.
20) பறவைகள் அல்லது மிருகங்கள் வைத்து பொழுதுபோக்கு அம்சங்கள் நடத்த அனுமதி இல்லை.
21) கட்சி சின்னங்களோ கொடிகளோ மத சம்மந்தமானவை குறித்த பிரச்சாரங்களோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.
22) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகு போக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.
23) பக்கக்காட்சி அமைப்பவர் தீ தடுப்பு துறைச்சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். உறுதி சான்று பெற்ற விவரம் நகராட்சிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
24) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனங்களை தவிர வேறு வியாபாரம் செய்யக்கூடாது.
25) பொருட்காட்சி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஒளி திறை மூலம் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும். (மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணைகளின்படி ஒலி மாசு அளவிற்கு உட்பட்ட ஒலி அளவில் இருக்க வேண்டும்)

26) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.
27) பொருட்காட்சி துவக்கவிழா மற்றும் நிறைவுவிழா, பொருட்காட்சி திடலில் கபடி போட்டி நடத்துதல், பரிசு பொருட்கள் வழங்கல் புகைப்படம் எடுத்தல் போன்றவை நகராட்சியை சார்ந்தது.
28) பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள வி.எல்.சி. மண்டபத்தில் நடத்தப்படும் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு நகராட்சியிடம் இருந்து நேரடியாக அனுமதி பெற வேண்டும்.
29) பொருட்காட்சி திடலில் தேவையான இடங்களில் சென்டிறிங் அடித்தல், மணல் நிரப்புதல், ஒலி, ஒளி அமைத்தல், கண்காணிப்புகேமரா பொருத்துதல் மற்றும் நுழைவு வாயில் அலங்காரம், 4 இடங்களில் ஆர்ச் (குழித்துறை சந்திப்பு, வெட்டுவெந்நி, திருத்துவபுரம், பம்மம்) தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் குழல்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளை வாவுபலி பக்கக்காட்சி உரிமதாரரே தங்கள் சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.(மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்களின் அருகில் ஒலி பெருக்கி வைக்க கூடாது)
30) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடை 11-ம், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20-ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் 9-ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ்பகுதியில் உள்ள நிரந்தரமான 12 அரசு ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான அரசு ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும் அதை ஒட்டி பாப்கான் சட்டமன்ற அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் நகராட்சி அரங்கம் மற்றும் இலாகாக்களின் அரங்கமும் அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து கூல்டிரிங்ஸ் கடை மற்றும் காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும், அதனை ஒட்டி அப்பளபஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக்காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் நகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் அமைத்து கொள்ள வேண்டும்.
31) குத்தகை இனம் வரிசை எண்.3 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும். அரசால் தடை செய்யப்பட்ட தேவையற்ற, அருவருக்கதக்க விளம்பரங்கள் செய்திட அனுமதி இல்லை. வாவுபலி பொருட்காட்சியில் குத்தகைதாரருக்கு நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் குறிப்பிடப்பட்ட கடைகளில் மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும்.
32) பொருட்காட்சி திடலிலிருந்து வெளியே செல்லும் போது வலதுபுறம் தீயணைப்பு துறை செயல்படும்.

33) மேற்கண்ட குத்தகை இனங்களில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையினை 100% முழுமையாக ஒரே தவணையில் காசாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி எழுத்து மூலம் மறுஏலம் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

34) நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் பாக்கி வைத்து இருப்பவர்கள் வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

35) அரசால் தடை செய்யப்பட்ட உணவு பொருட்கள் விற்பனை செய்ய அனுமதியில்லை. மேலும் காலாவதியான கெட்டுபோன உணவு பொருட்கள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36) வாவுபலி பொருட்காட்சி திடலில் சேகரமாகும் குப்பைகளை குத்தகைதாரர் சொந்த செலவில் அப்புறப்படுத்திட வேண்டும். மேலும் கைவினை பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் கண்காணிக்க நபர் நியமிக்கவும், பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவுபெறும் நாள் வரையுள்ள மின்கட்டணம் குத்தகைதாரரை சார்ந்தாகும். மேலும் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவு பெறும் நாள் வரையில் தேவையான பணியாளர்களை (பாதுகாவலர்கள்) நியமித்து ஊதியம் வழங்க வேண்டிய பொறுப்பு உரிமதாரரையே சார்ந்தாகும்.

37) ஆக்கிரமிப்பு கட்டணம் சதுர அடி ஒன்றிற்கு ரூ.1 வீதம் நாள் ஒன்றிற்கு வசூல் செய்ய வேண்டும்.

    1) பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறுமின்றி நிரந்தர குடியிருப்பு மற்றும் கடைகள் முன்பகுதி தவிர்த்து கீழ்குறிப்பிடும் இடங்களில் மட்டும் ஆக்கிரமிப்பு கட்டணம் வசூல் செய்ய வேண்டும். தியேட்டர் சந்திப்பிலிருந்து தபால் நிலையம் சந்திப்பு வரை, தபால் நிலைய சந்திப்பிலிருந்து ஆற்றிற்கு செல்லும் சாலை. தபால் நிலையம் சந்திப்பிலிருந்து மேல்புறம் செல்லும் சாலை.
    2) தபால் நிலையம் சந்திப்பிலிருந்து சிவன்கோவில் செல்லும் சாலையின் இருபக்கமும் ஆக்கிரமிப்புக் கடை வைக்க அனுமதி இல்லை.
    3) பொது மக்கள் நலன் கருதி கூட்ட நெரிசலின் போது நகராட்சி மற்றும் காவல் துறையினரால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

மன்றத்தீர்மான எண்.1243 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, கடைவாடகை நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்திட கேட்டு அறிவிப்பு நாளிதழில் வெளியிடப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பத்திரிக்கை பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினகரன் | 6249/- |
| 2 | தினமலர் | 4536/- |
| 3 | தினத்தந்தி | 7156/- |
| 4 | மாலைமலர் | 2016/- |

எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.969/2022/அ1.

மன்றத்தீர்மான எண்.1244 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் (Manual Scavengers) மனித கழிவுகளை மனிதனை அகற்றும் பணியில் மேற்கொள்ளும் பணியாளர்களை கணக்கெடுப்பு செய்வதில் எவரும் இல்லை என தெரியவருவதால் அதனை பொது மக்களின் கருத்துகளை அறிவதற்காக தினசரி நாளிதழில் தினகரன் விளம்பரம் வெளியிட்டதற்கான பில் தொகை வரப்பெற்றது. பட்டியல் தொகை கீழ்கண்டவாறு.

1) தினகரன் - 7440/-

எனவே மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2012/எச்1.

மன்றத்தீர்மான எண்.1245 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சியில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், காலிமனைவரி மற்றும் தொழில்வரி, கடைவாடகை நிலுவை தொகையினை மற்றும் நடப்பு தொகையினை ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி அறிவிப்பு செய்திட பாக்ஸ்

ஆம்பிளிபயர் மற்றும் ஆயில் இஞ்சின் வாடகைக்கு கொடுக்கும் பணிக்கு 21-02-2025-ம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒருநாள் வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ARUL ELECTRICALS & SOUNDS | 1600/- |
| 2 | RAJ SOUNDS | 1800/- |
| 3 | SIVA SOUNDS | 1875/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை கொடுத்துள்ள ARUL ELECTRICALS & SOUNDS என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் இதற்கான செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு இச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.351/2025/அ1.

மன்றத்தீர்மான எண்.1246 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சியில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழாவினை பத்திரிக்கை மூலம் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விபரப்படியான செலவினத்தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | பத்திரிக்கை பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மாலைமலர் | 9950/- |
| 2 | தினமணி | 9961/- |
| 3 | தினமலர் | 10710/- |
| 4 | தினத்தந்தி | 9840/- |
| 5 | தமிழ்முரசு | 10584/- |
| 6 | தினகரன் | 9975/- |

மேற்கண்டவாறு பட்டியல் தொகையினை பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1247 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு டிசம்பர் 30 மற்றும் 31 தேதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தொலைபேசி செய்தியின்படி பூங்காக்களில் அலங்கார மின்விளக்குகள் அமைத்திட தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பணியின் அவசரத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி சட்டம் 2022 பிரிவு 57(7)-ன்கீழ் இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திருமதி.P. சரோஜா என்பவர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் உள்ள பூங்காவில் அலங்கார விளக்கு அமைத்தமைக்கான செலவுத் தொகை ரூ.24000/- (ரூபாய் இருபத்து நான்காயிரம்) அன்னாருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.687/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1248 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சி வார்டு எண்.19 கருங்கல் சாலையில் மின்கம்ப எண்.2/19 முதல் 6/19 வரை மழைநீர் வடிகால் அமைத்திட 28-03-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வருமாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.C. ராஜன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 3.36% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.02% குறைவான கொடுத்துள்ள திரு.C. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2958/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1249 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வார்டு எண்.16 கீழ்பம்மத்தில் உள்ள MCC-யில் குப்பைகளை தரம் பிரித்து அரைக்கும் இயந்திரத்தில் பிளேட் பழுது ஏற்பட்டமையால் அதனை சரிசெய்திட உத்தேச மதிப்பீடு ரூ.2.15 இலட்சம் தயார் செய்யப்பட்டு பொது சுகாதார பணியின் அவசரத்தினை கருதி நகராட்சி சட்டம் 2022 பிரிவு 57(7)-ன் கீழ் இந்நகராட்சியில் பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.R. ஜெயசிங் என்பவர் மூலம் பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் பணிக்கான செலவினத் தொகையான ரூ.2,13,216/- பொது நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு:- பணியின் அவசரத்தினை கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 57(7)-ன் கீழ் பணி உத்தரவு மற்றும் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.749/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1250 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

தமிழ்நாடு அரசு சார்பில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுற்றது சார்பாக வெள்ளிவிழா கொண்டாட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள், உயர் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிக்கு குழித்துறை நகராட்சி சார்பில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அறிவுரை மற்றும் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி 24 சின்டெக்ஸ் டேங்குகள் மூலம் தூய குடிநீர் விநியோகம் செய்திட தெரிவிக்கப்பட்டதின் பேரில் மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.88 இலட்சம் தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 57(7)-ன் கீழ் இந்நகராட்சியில் பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆல்பர்ட் ராஜ் மூலம் பணி மேற்கொள்ள பணி உத்தரவு மற்றும் செலவினத் தொகையான ரூ.3,87,622/- வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு:- பணியின் அவசரத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 57(7)-ன் கீழ் பணி உத்தரவு மற்றும் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3056/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1251 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி வார்டு எண்.10-ல் அமைந்துள்ள விளவங்கோடு அரசு மேல்நிலை பள்ளியின் பின்புறம் சுற்றுச்சுவரானது இடிந்து விழும் நிலையிலும் உள்ளது என வார்டு உறுப்பினர் தெரிவித்ததின்பேரில் இடம்

பார்வையிடப்பட்டது. பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மழைக்காலங்களில் இடிந்து விழாதபடி சுற்றுச்சுவரை இடித்து புதிதாக அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.2.20 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.959/2025/இ1.
மன்றத்தீர்மான எண்.1252 அனுமதிக்கப்பட்டது.
<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் ODF++ மற்றும் 5 நட்சத்திர தகுதிக்கான முதற்கட்ட கள ஆய்வில் அனைத்து CT/ PT கழிவறைகள் வண்ணம் பூசுதல், கதவுகள் சரி செய்தல், மின்விளக்கு மற்றும் தண்ணீர் வசதி மற்றும் Closet பழுதுகள் பார்த்தல் ஆகிய குறைகளை சரி செய்ய அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் உள்ள அனைத்து CT/ PT கழிவறைகள் ஆய்வு செய்து மேற்கண்ட பழுதுகள் சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.4.80 இலட்சம் தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 2022 பிரிவு 57(7)-ன்கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. சரோஜா என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- பணியின் அவசரத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்ட பிரிவு 57(7)-ன்கீழ் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.939/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1253 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.